**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 25.02.2026.**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**அசல் வழக்கு எண்.140/2019**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | நடராஜன் | வயது | : | 60 |
| ஊர் | : | வெங்கட்ராயபுரம் | தொழில் | : | விவசாயம் |

**பி.வா.சா.1 (குமார்) வாதியின் குறுக்கு விசாரணை:**

1. வாதியானவர் என்னுடைய தங்கை என்றால் சரிதான். வழக்கு சொத்தானது முதலில் புறம்போக்கு சொத்தாக இருந்தது என்றால் சரிதான். அதன் பின்னர்தான் பட்டா வழங்கப்பட்டது. பட்டா கொடுப்பதற்கு முன்பு புறம்போக்கு இடத்தில் இருந்த வீட்டில்தான் நானும் தாயாரும், உடன்பிறந்த சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். பட்டாவானது 1994ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது என் தாயார் பெரில் கொடுக்கப்பட்டது. பட்டா கொடுக்கும்போது எனக்கு திருமணம் ஆகவில்லை. என்னுடைய தங்கையான காமாட்சியும் எல்லம்மாளும் பட்டா கொடுக்கப்பட்ட பின்னர்தான் திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். மற்றொரு பட்டாவானது எல்லம்மாள் பெயரில் வழங்கப்பட்டதா என்றால் சரிதான். அந்த பட்டாவும் 1994ல்தான் கொடுத்தார்கள். எதற்காக மற்றொரு பட்டா கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் குடும்பத்தில் மற்றொரு பெண்ணிற்கு கொடுக்கப்படவேண்டும் என்பதால் எல்லம்மாளுக்கு பட்டா கொடுக்கப்பட்டது. அந்த பட்டாவைத்தான் என்தாயார் என் தங்கைகளுக்கு பிரித்துக்கொள்ளும்படி கூறினார்.

2. அதன்படி வாதியான காமாட்சிக்கு சொத்து பிரித்துக்கொடுக்கப்பட்டதா என்றால் பிரித்துக் கொடுத்தோம். ஆனால் அதில் அவர் வீடு கட்டாமல் பயன்படுத்தவில்லை. புகழேந்திஎன்பவர் எல்லம்மாளின் மகன் ஆவார். மேற்படி எல்லம்மாள் புகழேந்திக்கு மனை முழுவதுமாக எழுதிவிட்டார். மேற்படி புகழேந்திக்கு எழுதிக்கொடுத்ததனை பஞ்சாயத்து முன்னிலையில் தீர்க்கப்பட்டதா என்றால் இல்லை. அப்பொழுதும் வாதி காமாட்சிக்கு எந்த பங்கும் இல்லை என்று புகழேந்தி கூறினார். மேற்படி வழக்கு சொத்தினை என் தாயார் வீடு கட்டி அது தற்போது வாடகை விடப்பட்டுள்ளது. இன்றைய தேதியிலும் வாதியான காமாட்சிக்கு மேற்படி வீட்டில் உரிமை உள்ளது என்றால' சரிதான். வாதியானவர் மேற்படி வீட்டில் தனக்கு உரிமை உள்ளது என்று வீட்டில் அனுபவிப்பதை புகழேந்தி தடுத்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் எல்லம்மாளோ புகழேந்தியோ வாழந்தது இல்லை என்று சொன்னால் சரிதான். எல்லம்மாள் புகழேந்திக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எப்போது தெரிய வந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் தெரியவந்தது. வழக்கு சொத்தில் வாதிக்கு

உரிமையுள்ளது என்றும் அதனை எல்லம்மாளும் புகழேந்தியும்தான் தடை செய்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை வாதி அனுபவிப்பதை எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது எல்லம்மாள் என்பவர் மூத்த மகள் என்பதால்தான் கொடுக்கப்பட்டது. இருவர் பெயரிலும் கொடுக்கமுடியாது என்பதால்தான் எல்லம்மாள் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தாயார் கங்காபாய் உயிருடன் இருந்தபோதே அனைவருக்கும் வாச்சா பாகப்பிரிவினை செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

**மறுவிசாரணை**

என் தாயார் எல்லம்மாளுக்கு கொடுக்கப்பட்ட பட்டாவின் சொத்தில் காமாட்சிக்கும் பங்கு உண்டு என்று கூறினார் என்றால் சரிதான். எனக்கு எழுதி வைத்த சொத்தில் பங்கு இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.25 15:29:02 +05'30'

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு